


11.05.2025

தலைப்பு செய்திகள்

1. நாட்டின் பாதுகாப்பு குறித்து பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

2. ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் மாநில எல்லை பகுதிகளில் தற்போது முழு அமைதி நிலவுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தொழில்நுட்பங்கள் மக்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்துவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் 31 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் ஊரக வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

5. கொழும்புவில் மகளிர் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் இறுதிபோட்டியில் இலங்கை வெற்றிபெற 343 ரன் இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

பிரதமர்

நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக உயர்மட்ட ஆலோசனை கூட்டம் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித்தோவல், தலைமை தளபதி ஜென்ரல் அனில் சவ்ஹான், முப்படைகளின் தளபதிகள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

இந்தியா பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட நிலையில் தேச பாதுகாப்பு, அடுத்த கட்ட நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.

இதனிடையே இந்தியா பாகிஸ்தான் ராணுவ தலைமை இயக்குனர்கள் நிலையிலான அடுத்தகட்ட பேச்சுவார்த்தை நாளை மீண்டும் நடைபெறுவதை ஒட்டி இன்றைய கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

***********

எல்லை அமைதி

இந்தியா பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதை அடுத்து ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் மாநில எல்லை பகுதிகளில் தற்போது முழு அமைதி நிலவுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஜம்மு, பூஞ், ரஜோரி, அக்னூர், பதான்கோட் ஃபெரோஸ்பூர் அம்ரித்சர், ஜெய்சல்மார் உள்ளிட்ட இடங்களில் இன்றுகாலை முதல் இயல்பு நிலை திரும்பியுள்ளது.

ஜம்முகாஷ்மீரில் புல்வாமா, அனந்த்நாக், குல்காம், ஷோ.ஃபியான் மாவட்டங்களில் மாநில புலனாய்வு அமைப்பினர் தீவிரசோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தீவிரவாதிகளின் புகழிடங்களை கண்டறிந்து அவர்களின் தகவல் தொடர்புகளை முற்றிலும் அழிப்பது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிகிறது.

***********

விக்ரம் மிஸ்ரி

முன்னதாக புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செயலர் திரு.விக்ரம் மிஸ்ரி எல்லை பகுதி சூழ்நிலைகளை முப்படையினர் உன்னிப்பாக கவனித்து வருவதாக தெரிவித்தார்.

போர் நிறுத்த விதிமீறல்கள் மீண்டும் நிகழ்ந்தால் அதை கடுமையாக கையாள நம் ஆயுதப்படைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

***********

ஆபரேசன் சிந்தூர்

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிரான ஆபரேசன் சிந்தூர் வெற்றிகரமாக நடைபெற்றதாக இந்திய விமான படை தெரிவித்துள்ளது.

எனினும் ஆபரேசன் சிந்தூர் தொடர்பான உறுதி செய்யப்படாத, தவறான கணிக்கப்பட்ட செய்திகளை வெளியிடுவதை ஊடகங்கள், தனிநபர்கள் உட்பட அனைவரும் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

***********

விமான நிலையம்

புதுதில்லி சர்வதேச விமான நிலையம் இன்றுகாலை முதல் வழக்கம் போல் செயல்பட தொடங்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் உறுதி செய்யப்பட்ட தகவல்களை பயணிகள் தெரிந்துகொள்வதுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படும் மாற்றங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

***********

தேசிய தொழில்நுட்ப தினம்

தொழில்நுட்பங்கள் மக்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்துவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

தேசிய தொழில்நுட்ப தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி வாழ்த்து தெரிவித்துள்ள அவர், விஞ்ஞானிகள், பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு தலைவணங்குவதாக கூறியுள்ளார்.

1998ம் ஆண்டு பொக்ரான் அணு ஆயுத சோதனை வெற்றிக்கு வித்திட்ட விஞ்ஞானிகளை நாடு பெருமையுடன் நினைவு கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

அன்றாட வாழ்வில் தொழில்நுட்பத்தின் பங்கை மற்றும் அறிவியல் தொழில்நுட்பத்தில் இளையோர்களின் ஆர்வத்தை அதிகரிக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

***********

ராஜ்நாத்சிங்

உத்திரபிரதேச மாநிலம் லக்னோவில் 300 கோடி ரூபாய் மதிப்பிலான பிரம்மோஸ் ஏவுகணை உற்பத்தி மையத்தை பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இன்று திறந்துவைத்தார்.

சுய சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் வகையில் ஏவுகணைகள் மட்டுமல்லாமல் சோதனை, ஒருங்கிணைப்பு உள்ளிட்ட வான்வெளி பாதுகாப்பு தளவாடங்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும்.

இம்மையம் தொடங்கப்படுவதன் மூலம் இப்பகுதியின் தொழில்நுட்ப வளர்ச்சி அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

***********

கே.என்.நேரு

தமிழகத்தில் அதிகரித்துவரும் நகர்புற மக்கள் தொகையை கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் 13 கோடியே 27 லட்ச ரூபாய் மதிப்பில் காய்கனி வணிக வளாகத்தை இன்று திறந்துவைத்து பேசிய அவர், ஊரகத்துறையின் வளர்ச்சிக்கு 31 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 3 கோடி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக கூறிய அவர் மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முனைப்புடன் நிறைவேற்றப்படுவதாக எடுத்துரைத்தார்.

வாய்ஸ்

***********

தமிழக அரசு

தமிழகத்தின் பல்வேறு முன்னோடி திட்டங்களால் மின்னணு ஏற்றுமதி, வேலை வாய்ப்பு, தோல்பொருள், ஜவுளி உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பெறப்பட்டு வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

கல்விதுறை மேம்பாட்டு திட்டங்களால் தேசிய அளவில் 51.3 சதவிகிதத்துடன் உயர்கல்வி மாணாக்கர் சேர்க்கையில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலணிகள் மற்றும் தோல்பொருட்கள் தயாரிப்பில் 38 சதவிகித வளர்ச்சி,

உலகளாவிய திறன்மையங்களில் 24.5 சதவிகித வளர்ச்சி உள்ளிட்டவற்றுடன் பல்வேறு துறைகளில் தொடர்ந்து முதல் இடம் வகிப்பதாகவும் அரசின் செய்திகுறிப்பு தெரிவிக்கின்றது.

***********

ஒத்திகை பயிற்சி

தமிழகத்தில் உள்ள முக்கிய அணைகள் மற்றும் நீர்தேக்கங்களில் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி அடுத்த வாரம் நடைபெறும் என அரசு அறிவித்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனையின்படி நடைபெறும் இந்த ஒத்திகை பயிற்சி குறித்து பொதுமக்கள் பதட்டமோ, அச்சமோ கொல்ல தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

மா.சுப்பிரமணியன்

தமிழகத்தில் ஆயிரத்து 256 இடங்களில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாம் விரைவில் நடைபெறும் என மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதற்காக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் 17 வகையான சிறப்பு மருத்துவம் மற்றும் 30 வகையான பரிசோதனைகள் இதில் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

***********

திருச்செந்தூர்

திருச்செந்தூரில் கடல் உள்வாங்கியதை அடுத்து அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

அரியலூர்

அரியலூர் மாவட்டம் பொய்யாத நல்லூர், வெல்லூர், ஒட்டக்கோவில், தெம்மனம், கல்லக்குடி ஊராட்சிகளில் வரும் செவ்வாய்கிழமை நடைபெற

இருந்த மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் 24ஆம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

கன்னியாகுமரி

பெண்களின் சபரிமலை என போற்றப்படும் கன்னியாகுமரி மாவட்டம் மண்டைகாடு பகவதி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் வரும் 23ஆம் தேதிமுதல் வருவாய் தீர்வாயம் ஜமாபந்தி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் சிறுமலையில் 10 கோடி ரூபாய் மதிப்பில் நடைபெற்று வரும் சுற்றுலா மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சரவணன் நேரில் ஆய்வு செய்தார்.

சுற்றுலா பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் சிறுமலை அருவி, பாண்டியன்குளம், பல்லுயிர் பூங்கா உள்ளிட்ட இடங்களில் சிறப்பம்சங்கள் உள்ளிட்டவை குறித்து இதில் ஆய்வு செய்யப்பட்டது.

சேலம் அரசு மோகன்குமார மங்களம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 100 பயனாளிகளுக்கு 8 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான காதொலி கருவிகளை ஆட்சித்தலைவர் திருமதி பிருந்தா தேவி இன்று வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் கூவாகம் கூத்தாண்டவர் கோவில் திருவிழாவை ஒட்டி மிஸ் கூவாகம் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் பெண் ஊழியர்களுக்கான எறிபந்து போட்டிகள் இன்று தொடங்கின.

***********

கோவில்

மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நாளை நடைபெறுகிறது.

இதற்காக அழகர் கோவிலிலிருந்து கள்ளழகர் திருக்கோலத்தில் நேற்று புறப்பட்ட சுந்தர்ராஜ பெருமாளுக்கு இன்றுஅதிகாலை மூன்றுமாவடியில் எதிர்சேவை வெகுவிமரிசையாக நடைபெற்றது.

காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோவில் வைகாசி பிரம்மோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சிகளான கருடசேவை வரும் 13ஆம் தேதியும்,

தேரோட்டம் 17ஆம் தேதியும் நடைபெறுகின்றன.

***********

ஐ.பி.எல் - பி.சி.சி

இந்தியா பாகிஸ்தான் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதை அடுத்து ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளை மீண்டும் நடத்துவது குறித்து இன்று ஆலோசிக்கப்படும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

தரம்சாலா நீங்கலாக சென்னை பெங்களூரு உள்ளிட்ட நகரங்களில் அடுத்த வாரம்முதல் இப்போட்டிகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

***********

கிரிக்கெட்

கொழும்புவில் மகளிர் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் இறுதிபோட்டியில் இலங்கை வெற்றிபெற 343 ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

முன்னதாக டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 342 ரன் எடுத்திருந்தது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது